**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 217 of 2025

Depositions of PW -3 witness for ________ Prosecution / Defence / Court

Name : விஜயலட்சுமி

Father's Name : துரை

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th **day of February** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் சூலூர் காங்கேயம் பாளையத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். சம்பவத்தில் இறந்த மணிகண்டன் எனது மகன் ஆவார். கடந்த 15.08.2017 ஆம் தேதி எனது மகன் அவரின் நண்பர் ரஹீம் என்பவர் எனக்கு போன் செய்து எனது மகன் இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து கொண்டு கோவை - திருச்சி மெயின் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக சென்று கொண்டிருந்த பொழுது வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு விட்டதாகவும் எனது மகனுக்கு தலையில் அடிபட்டு இருப்பதாகவும் தகவல் தெரிவித்தார். நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது என் மகனை 108 ஆம்புலன்சின் மூலமாக கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று உள்ளதாக தகவல் சொன்னார்கள்.

2. நான் கோவை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்த பொழுது அங்கு எனது மகன் இறந்த நிலையில் இருந்தார். பின்னர் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுனர் மீது நடவடிக்கை எடுக்கும்படி என் மருமகள் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள். மேலும் எனது

கணவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்ட பொழுது உடன் இருந்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என் மகன் இறந்ததாக அருண்குமார் தகவல் கொடுத்தார். சம்பவ இடத்திற்கு நாங்கள் சென்றபோது எனது மகனை மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக தெரிவித்தார்கள். நாங்கள் மருத்துவமனைக்கு சென்றோம்.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.11 18:54:27 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**